செ.வெ.எண்: 11 நாள்: 05.01.2017

# பத்திரிகைச் செய்தி

## "கேலோ இந்தியா" ___ மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் - 2016-2017

2016-17-ஆம் ஆண்டிற்கு விளையாடு இந்தியா எனும் மத்திய அரசின் திட்டத்தின்கீழ் தேசிய அளவிலா விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி கலந்து கொள்ளும் பொருட்டு, புதுக்கோட்டை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பொறுக்குத் தேர்வுகள் மாவட்ட விளையாட்டரங்கத்தில் கீழ்கண்டுள்ளபடி நடைபெறவுள்ளது. நீச்சல் போட்டிகள் திருச்சிராப்பள்ளி அண்ணா விளையாட்டரங்க நீச்சல்குளத்தில் நடைபெறவுள்ளது.

**07.01.2017 அன்று நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் விபரம்:**
தடகடளம், டக்வாண்டோ, கையுந்துபந்து, பளுதூக்குதல், இறகுப்பந்து, குத்துச்சண்டை, மேசைப்பந்து, கபாடி, டென்னிஸ், நீச்சல்.

மேற்காணும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு முதல் பரிசாக தலா ரூ.350/-, இரண்டாம் பரிசாக தலா ரூ.250/- மற்றும் மூன்றாம் பரிசாக தலா ரூ.150/- வீதம் பரிசுத்தொகையாக வழங்கப்படவுள்ளது. போட்டிகளில் கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவு மற்றம் பயணப்படி வழங்கப்படுமாதலால், பேரூந்துகட்டணச் சீட்டினை கட்டாயம் கொண்டு வருதல் வேண்டும். பரிசுத் தொகை வங்கியில் செலுத்தப்படவுள்ளதால் போட்டியில் கலந்து கொள்ளவரும் மாணவ, மாணவியர்கள் தங்களது வங்கி கணக்குப் புத்தகத்தின் **(Bank Pass Book Xerox)** முதல் பக்க ஜெராக்ஸ் நகலினை கொண்டு வருதல் வேண்டும்.

**அன்று நடைபெறும் விளையாட்டு பொறுக்குத் தேர்வுகள் விபரம்:**

1.மிதிவண்டி 2. கோ-கோ 3. கால்பந்து 4. ஜூடோ 5. வில்வித்தை
6. கூடைப்பந்து 7. கைப்பந்து 8. வளைகோல்பந்து 9. ஜிம்னாஸ்டிக்கஸ்
10.வூஷூ( Wushu)

மாவட்ட அளவிலான போட்டிகள் மற்றும் பொறுக்குத் தேர்வுகள் 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் 17 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கு தனித்தனியாக நடத்தப்படும். மல்யுத்த (Wrestling) விளையாட்டுத் தேர்வுகள் மட்டும் ஒரே பிரிவாக 14 முதல் 16 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்படும். குழுப்போட்டிகளில் ஒரு பள்ளியிலிருந்து ஒரு வயதுப் பிரிவில் ஒரு அணி மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

14 வயதுக்குட்பட்டவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் 01.01.2003 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும், 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் 01.01.2000 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். மாவட்ட அளவிலான போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள்/முதலிடம் பெறும் அணியினர் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுப்பி வைக்கப்படுவார்கள். 08.01.2017 அன்று நடத்தப்படும் மாவட்ட அளவிலான பொறுக்குத் தேர்வுகளில் சிறப்பாக விளையாடும் இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவியர்கள் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் தேர்வு செய்யப்பட்டு மாநில அளவிலான பொறுக்குத் தேர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் தங்களது வயதுச் சான்றினையும், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க ஜெராக்ஸ் நகலினையும் கண்டிப்பாக எடுத்து வருதல் வேண்டும்.**

மேலும் விபரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளையாட்டரங்கம், புதுக்கோட்டை - 622 003, அலைபேசி எண்.7401703498

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**